**17.04.2026**

அ.வ.எண்.**134/2016**

<u>வா.சா.1 மணி, 3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1.** எனது தாத்தா பெயர் கந்தன் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு **2** மனைவிகள், முதல் மனைவி மூலம் மூன்று மகன்கள் மற்றும் இரண்டாவது மனைவி மூலம் ஒரு மகன் ஆகும். எனது தாத்தா கந்தன் தாவா சொத்தை **1957**ம் வருடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். எனது தாத்தா கந்தன் எப்போது இறந்தார் என்றால் **1966**ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தாத்தா கந்தனின் மகன்களின் பெயர் சின்னப்பன், பொன்னுசாமி, கிருஷ்ணன் மற்றும் ரங்கநாதன். மனோகர் அப்பாவிற்கு எனது தாத்தா கந்தன் எப்போது கிரையம் கொடுத்தார் என்றால் **1959**ம் வருடம் **65** செண்ட் நிலமும் **1960**ம் வருடம் **60** செண்ட் நிலமும், **1964**ம் வருடம் **1** ஏக்கர் நிலமும் கிரையம் கொடுத்தார்.

**2.** எனது தாத்தா கந்தன் காலத்திற்கு பிறகு அவரது மகன்களுக்குள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். **1970**ம் வருடம் பாகபிரிவினை செய்து கொண்டார்கள். தேதி, மாதம் ஞாபகமில்லை. சின்னப்பன் என்பவருக்கு எந்த சொத்து பாகம் கிடைத்து என்றால் சர்வே எண்.**192/1**எ-ல் **60** செண்ட் கிடைத்தது, சர்வெ எண்.**193** சொத்து ரங்கநாதன் பாகத்திற்கு ஒதுக்கபட்டது, சர்வெ எண்.**189** சொத்து கிருஷ்ணனுக்கு ஒதுக்கபட்டது, சர்வே எண்.**190** சொத்து பொன்னுசாமிக்கு ஒதுக்கப்பட்டது. மேற்சொன்ன பாகபிரிவினை பதிவு

செய்யபட்டதா என்றால் வாய்மொழிப் பாகபிரிவினை ஆகும். மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் எனது பிராது மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. எனது அப்பா சின்னப்பன் எந்த வருடம் இறந்தார் என்றால் 2012ம் வருடம் இறந்தார். 1970ம் வருடம் வாய்மொழி பாகபிரிவினையிலிருந்து 2012ம் வருடம் எனது அப்பா இறக்கும் வரை அவர் பெயரில் தாவாசொத்திற்கு பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 மகன்கள். அவர்களின் பெயர் முருகேசன், நான் மற்றும் சீனிவாசன் ஆவார்கள். முருகேசன் இறந்துவிட்டார். முருகேசன் எப்போது இறந்தார் என்றால் எனது அப்பா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். முருகேசனின் மனைவி பெயர் கங்கா அவருக்கு 2 மகன்கன் அவர்களின் பெயர் வீரராகவன் மற்றும் செல்வம் ஆகும்.

4. எனது தம்பி சீனிவாசனும் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்றால் எனது அப்பா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். சீனிவாசன் மனைவி பெயர் சின்னபொன்னு, அவருக்கு ஒரு மகன், அவரது பெயர் லோகநாதன் ஆகும். எனது அண்ணன் முருகேசனின் வாரிசுகளோ அல்லது எனது தம்பி சீனிவாசனின் வாரிசுகளோ எனக்கு வழக்கை நடத்துவதற்கு பொது அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கும் சேர்த்துதான் நான் வழக்கை நடத்தி வருகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் அவர்களுக்கு தெரியுமா என்றால்

தெரியும். ஏன் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் சிறுபிள்ளைகளாக இருந்தார்கள், எனது அண்ணி அவர்கள் என்னை வழக்கு நடத்த சொன்னார்கள்.

**5**. **2012**ம் வருடம் எனது அப்பா இறந்தபிறகு எனது தாத்தா கந்தனின் வாரிசுகள் பெயரில் பட்டா வரவில்லை என்றால் சரிதான், வரி மட்டும் செலுத்தி வந்தோம். வரி செலுத்தியதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். நான் தாவாசொத்தை அனுபவித்து வந்ததை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணன், ரங்கநாதன் மற்றும் பொன்னுசாமி வாரிசுகளையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர்களின் சம்மதம் பெற்றுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

**6**. கிருஷ்ணன், ரங்கநாதன் மற்றும் பொன்னுசாமி ஆகியோர்களுக்கு தாவாசொத்தில் பாகம் உண்டா என்றால் இல்லை. கிருஷ்ணன், ரங்கநாதன் மற்றும் பொன்னுசாமி ஆகியோர்களின் அனுமதி பெற்றதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை எனது தாத்தா கந்தன் **05.02.1965** ஆண்டு வாய்மொழியாக **1**ம் பிரதிவாதி தந்தைக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. **1965**ம் வருட காலகட்டத்தில் எனது தாத்தா கந்தனுக்கு உடல்நிலை சரியல்லாத காரணத்தால் கிரைய பத்திரத்தை பதிவு செய்து தர முடியவில்லை

என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் 01.01.1987 முதல் 05.07.2016 வரைதான் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 28.04.1982 தேதியில் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டு தாவாசொத்து 1ம் பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கபட்டது என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தனி தனியாக பதிலுரையை தாக்கல் செய்தனர், அதை எனது வழக்கறிஞர் படித்து காட்டினாரா என்றால் படித்து காட்டினார். மேற்சொன்ன பதிலுரையில் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் ஏற்பட்ட பாக பிரிவினை விவரங்களை பற்றி கூறியுள்ளது தெரியுமா என்றால் தெரியும். அதற்கு பிறகு நான் மேற்சொன்ன பாகபிரிவினை நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த பாகபிரிவினையில் தாவாசொத்து 1ம் பிரதிவாதி பாகத்திற்கு ஒதுக்கபட்டது என்றால் சரிதான், ஆனால் அது தவறாகும்.

8. மேற்சொன்ன பாகபிரிவினை ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவாசொத்து எனது தாத்தா கந்தனின் வாரிசுகளுக்கு பாத்தியமா அல்லது 3ம் பிரதிவாதிக்கு பாத்தியமா என்பது தான் பிரச்சனை என்றால் சரிதான். எனவே இந்த வழக்கை தாவாசொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். ஒரு வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் ஆவணங்கள் மட்டும் செல்லாது என்று பரிகாரம் கோர முடியாது

என்றால் சரியல்ல. 1982ம் வருடத்தில் பாகபிரிவினை ஏற்பட்டு 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட பிறகு 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 1998ம் வருடம் விற்பனை செய்த காலம் வரை 1ம் பிரதிவாதி பெயரில்தான் பட்டா இருந்தது என்றால் சரிதான், 1ம் பிரதிவாதி குடும்பத்தின் பெயரில் தவறான ஆவணங்கள் இருந்ததால் அவர்களுக்கு பட்டா வழங்கபட்டது.

9. 1982ம் வருடத்திலிருந்து 1998ம் ஆண்டு வரை எனது அப்பா மற்றும் அவரது தம்பிகள் 1ம் பிரதிவாதிகள் பெயரில் பட்டா இருந்ததை ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்துள்ளோம். எந்த வருடம் ஆட்சேபணை செய்தோம் என்றால் 2009ம் வருடம் செய்தேன், 1998ம் வருடம் வரை ஆட்சேபணை செய்யவில்லை. 15.09.1998ம் வருடம் 3ம் பிரதிவாதி தாவா சொத்து மற்ற சொத்துகளையும் கிரைய வாங்கிவிட்டார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து தற்போது வரை அவர் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 2009ம் வருடம் யாரிடம் ஆட்சேபணை செய்தோம் என்றால் வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் ஆட்சேபணை செய்தோம்.

10. 2009ம் வருடமே 1ம் பிரதிவாதி கிரையம் செய்த விவரம் எனக்கு தெரிய வந்ததா என்றால் சரிதான். மேலும் எந்த தேதி, மாதம் எனக்கு தெரிய வந்தது ஞாபகமில்லை. 2009ம் வருடத்திலிருந்து 2012ம் வருடம் வரை சட்டபடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவாசொத்து சர்வே எண்.192/1எ-ல் மொத்த சொத்து 2 ஏக்கர் 85

செண்ட் ஆகும். மேற்சொன்ன மொத்த சொத்தும் 3ம் பிரதிவாதி சுவாதீனத்திலும் அனுபவத்திலும் உள்ளதா என்றால் சரிதான், அவர்கள் கிரையம் பெற்றதால் அவர்கள் அனுபவத்தில் உள்ளது, ஆனால் நாங்கள் விற்கவில்லை.

**11.** நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்தேனா என்றால் நகல் எடுத்து பார்த்தேன், அதை நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன பட்டா எண்.345 என்றால் சரிதான். தாவாசொத்துகள் எனது தாத்தா காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகளின் அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. 04.07.2016ம் தேதியன்று 3ம் பிரதிவாதி என்னிடம் தகராறு செய்தார்கள் என்று கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் சரியான பரிகாரம் கேட்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு மூலம் தவறு என்றால் சரியல்ல.

**12.** கந்தன் காலத்தில் வாய்மொழியாக எனது தாத்தா 1ம் பிரதிவாதிக்கு விற்றதால்தான் எனது தாத்தாவின் மற்ற வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினர்களாக வரவில்லை என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.